செய்தி வெளியீடு எண்:326 நாள்: 26.06.2021

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (26.6.2021) நேரு உள் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், விளையாட்டு வீரர்களுக்கான கொரோனா நோய்த் தொற்று தடுப்பு ஊசி சிறப்பு முகாமைத் தொடங்கி வைத்து, ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளும் விளையாட்டு வீரர்களுக்கு அரசின் சிறப்பு ஊக்கத் தொகை வழங்கி ஆற்றிய உரை.

---

விளையாட்டு வீரர்களுக்கான கொரோனா நோய்த் தொற்று தடுப்பு ஊசி சிறப்பு முகாம் நிகழ்ச்சிக்கு வருகை தந்திருக்கக்கூடிய அனைவரையும் வரவேற்று, எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்களே, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்களே, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி.கே. சேகர்பாபு அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் திரு. பரந்தாமன் அவர்களே, திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களே, டாக்டர் எழிலன் அவர்களே, நிகழ்ச்சியில் பங்கேற்கக்கூடிய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு

மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. அபூர்வ வர்மா அவர்களே, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களே, தமிழ்நாடு ஒலிம்பிக் சங்கத் தலைவர் திரு. என். ராமச்சந்திரன் அவர்களே மற்றும் நிகழ்ச்சியில் பங்கேற்கக்கூடிய அரசு அதிகாரிகளே, விளையாட்டுத் துறையைச் சேர்ந்த நிர்வாகிகளே, எனக்கு முன்னால் உரையாற்றிய தமிழ்நாடு ஒலிம்பிக் சங்க செயற் குழு உறுப்பினர் திரு. ஆதவ் அர்ஜுன் அவர்களே, விளையாட்டு வீரர்களே, தொலைக்காட்சி, பத்திரிகை ஊடக நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கம்.

தமிழ்நாடு அரசின் சார்பில் நடைபெறும் விளையாட்டு வீரர்களுக்கான கொரோனா நோய்த் தொற்று தடுப்பு ஊசி சிறப்பு முகாம் மற்றும் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளும் விளையாட்டு வீரர்களுக்கு அரசின் சிறப்பு ஊக்கத் தொகை வழங்கும் நிகழ்ச்சிக்கு வருகை தந்துள்ள அனைவருக்கும் நான் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியிலே நானும் பங்கேற்கக்கூடிய வாய்ப்பினைப் பெற்றமைக்குப் பெருமைப்படுகிறேன், பூரிப்படைகிறேன்.

விளையாட்டுப் போட்டிகளில் முக்கியமாக இருக்க வேண்டிய ஒன்று என்னவென்றால், டீம் ஸ்பிரிட். (Team Spirit). இதுதான் மிக மிக முக்கியமான ஒன்றாக விளங்குகிறது.

ஒவ்வொரு வீரரும் தனித்தனி திறமை கொண்டவர்களாக இருந்தாலும், அந்த வீரர்கள் எல்லோரும் ஓர் அணி என்ற உணர்வுடன் களத்தில் செயல்படுகின்ற நேரத்தில்தான் அது முழு வெற்றியைப் பெற்றிட முடியும். அந்த டீம் ஸ்பிரிட்டை இந்த விழா நடத்துகின்ற துறைகளிடம் நான் காண்கிறேன். எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து இந்த நிகழ்ச்சியைச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இதுவும் ஒரு டீம் ஸ்பிரிட் தான்.

தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, தமிழ்நாடு ஒலிம்பிக் சங்கம் ஆகியவை ஒருங்கிணைந்து, டீம் ஸ்பிரிட்டுடன் இந்த நிகழ்ச்சியை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். எனவே, இந்த நிகழ்ச்சியே, விளையாட்டுப் போட்டிகள் போல உடலுக்கும் மனதுக்கும் ஊக்கம் தரக்கூடிய வகையில் நடைபெறுகிறது.

வாழ்க்கையே ஒரு விளையாட்டு என்று சொல்வார்கள். அரசியலை விளையாட்டாக நினைப்பவர்களும் நம் நாட்டிலே இருக்கிறார்கள். ஆனால், விளையாட்டுத் துறையை விளையாட்டாக நினைத்துவிடக்கூடாது. அதை விளையாட்டாக நினைத்தால் விளையாட்டாகப் போய்விடும். ஆகவே அரசு இன்றைக்கு இந்த விளையாட்டுத் துறையை மேன்மைமிக்க துறையாக உருவாக்குவதில் உறுதியாக இருக்கிறது.

விளையாடுபவர்களை விளையாட்டுக்காரர்கள் என்று சொல்வதில்லை, அவர்களை ‘விளையாட்டு வீரர்கள் - வீராங்கனைகள்’ என்றுதான்

சொல்கிறோம். இந்த வீரர்களால்-வீராங்கனைகளால் நாட்டுக்குப் பெருமை. நாளைய தலைமுறைக்கு ஒரு வலிமை.

ஒருவர் விளையாட்டுப் போட்டியில் தீவிரமாகப் பங்கேற்கிறார் என்று சொன்னால், அவரது உடல்திறன் வலுவாக இருப்பது மட்டுமல்ல, மனதிடமும் உறுதி குலையாமல் இருக்க வேண்டும். இலக்கை நோக்கிப் பயணிப்பதில் எத்தனை இடையூறுகள் வந்தாலும் அதனை சவாலாக எதிர்கொண்டு, சமாளிக்கத் தெரிய வேண்டும், அதற்கான பயிற்சிகளை எடுக்க வேண்டும்.

கிரிக்கெட்டில் டோனி மாதிரி விளையாட்டு வீரர் சிக்ஸர் அடித்தால், மைதானத்தில் இருக்கும் அத்தனைபேரும் அவர்களே சிக்ஸர் அடித்த மாதிரி சந்தோஷப்படுவார்கள். அதேபோன்று, ஃபுட்பாலில் ரொனால்டோ கோல் போட்டால், ஸ்டேடியத்தில் கூடியிருக்கும் அத்தனை பேரும் கோல் போட்டது போன்ற உணர்வைப் பெறுவார்கள். அதை டி.வியில் பார்க்கின்ற ரசிகர்களுக்கும் மக்களுக்கும் அந்த உணர்வுதான் ஏற்படுகிறது. அவர்களில் இருந்து டெண்டுல்கர்களும் டோனிகளும் பி.டி.உஷாக்களும் மல்லேஸ்வரிகளும் உருவாகிறார்கள்.

அந்த வகையில் ஒரு தலைமுறைக்கே ஊக்கம் தரக்கூடியவர்கள்தான் இங்கே குழுமியிருக்கின்ற விளையாட்டு வீரர்களான நீங்கள் அனைவரும், அதை மறந்துவிட முடியாது. எனவே உங்கள் நலன் பேணிப் பாதுகாக்கப்படும். எனவே, அரசைப் பொறுத்தவரைக்கும் நிச்சயமாக

என்றைக்கும் உங்களுக்குத் துணை நிற்கும் என்ற உறுதியை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சர்வதேச விளையாட்டு மற்றும் ஒலிம்பிக் போட்டிகளில் நம்முடைய வீரர்கள் வெற்றி பெற்று தமிழ்நாட்டிற்கும், இந்திய துணைக் கண்டத்திற்கும் பெருமை சேர்க்கும் வகையில் தேவையான உயர்மட்ட செயல் திறன் பயிற்சி, பயணச் செலவுகள், ஊக்கத் தொகை, சமூக நலன் மற்றும் மனநலன் மேம்படுத்தும் பயிற்சிகளும் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு, ஊக்கப்படுத்தப்பட்டு வருகின்றன.

நமது மாநிலத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களுக்கு அரசின் பல்வேறு துறைகளில் விளையாட்டு வீரர்களுக்கான இட ஒதுக்கீட்டின் கீழ் பணி நியமனம் வழங்கப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு விளையாட்டு வீரரிடமும் வீராங்கனையரிடமும் 3 முக்கியப் பண்புகள் இருக்கும். விரைவாகச் செயல்படுதல் - துணிவாக முயற்சி செய்தல் - உடலை வலிமையாக பராமரித்தல் ஆகிய இந்த மூன்றும் மிகமிக முக்கியம். இந்தப் மூன்று பண்புகளையும் அரசும் உள்ளத்திலே வைத்துக் கொண்டிருக்கிறது.

பேரிடர் காலத்தில் விரைவாகச் செயல்பட்டு, துணிவான முயற்சிகளை மேற்கொண்டு, தமிழ்நாடு என்ற மாநிலத்தை வலிமையாகப் பராமரித்து வருகிறது. வலிமைமிக்க தமிழ்நாட்டில் விளையாட்டுத் துறையைச் சார்ந்த நீங்களும் ஓர் அங்கம்.

சர்வதேச அளவிலும் இந்திய அளவிலும் சிறந்து விளங்கக்கூடிய நமது வீரர்களுக்கான சிறப்பு ஊக்கத் தொகைத் திட்டம் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 10 இலட்சம் வரை விளையாட்டுக் கருவிகள், போட்டிகளுக்கான பயணச் செலவு ஆகியவற்றுக்கான நிதியுதவிகள் எல்லாம் வழங்கப்பட்டு வருகின்றன.

சர்வதேச அளவிலான போட்டிகளில் வெற்றி பெறக்கூடிய வகையில் ஆண்டுக்கு ரூபாய் 25 இலட்சம் வரை உயர்மட்டப் பயிற்சி, உலகளாவிய போட்டிகளுக்கான பயணச் செலவு ஆகியவற்றுக்கான நிதயுதவி செய்யப்படுகிறது.

ஜப்பான் நாட்டின் தலைநகர் டோக்கியோவில் 23-7-2021 முதல் 8-8-2021 வரை நடைபெற உள்ள ஒலிம்பிக் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த செல்வி நேத்ரா குமணன், திரு வருண் எ.தக்கர் மற்றும் திரு. கே.சி.கணபதி ஆகியோர் பாய்மரப் படகோட்டுதல் போட்டியிலும், திரு. ஜி.சத்தியன் மற்றும் எ.சரத்கமல் ஆகியோர் மேசைப் பந்து போட்டியிலும், செல்வி சி.ஏ.பவானி தேவி வாள் சண்டைப் போட்டியிலும், மாற்றுத் திறனாளர்களுக்கான பாராலிம்பிக் போட்டிகளில் உயரம் தாண்டுதல் போட்டியில் திரு டி. மாரியப்பன் என ஆக மொத்தம் 7 வீரர்-வீராங்கனைகள் பங்கேற்க இருக்கிறார்கள் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

செல்வி சி.ஏ.பவானி தேவி அவர்களுக்கு ரூபாய் 5 இலட்சம் சிறப்பு ஊக்கத் தொகை அரசால் ஏற்கெனவே வழங்கப்பட்டு விட்டது. மீதமுள்ள 6 விளையாட்டு வீரர்களுக்கும் அரசின் சிறப்பு ஊக்கத் தொகையாக தலா 5 இலட்சம் ரூபாய் வீதம் 30 இலட்சம் ரூபாய் வழங்கப்பட இருக்கிறது என்பதை மிகுந்த மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

விளையாட்டு வீரர்கள் அனைவருக்கும் தேவையான உடற்பயிற்சி மற்றும் அறிவியல் ரீதியிலான பயிற்சி மேற்கொள்வதற்கான நவீன உட்கட்டமைப்பு வசதிகள் உலகத் தரத்தில் அரசு ஏற்படுத்தித் தரக்கூடிய அந்தப் பணிகளையெல்லாம் நிச்சயமாக இந்த அரசு செய்யும் என்ற உறுதியினை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தலைச்சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்குவதற்கு நம்முடைய குழந்தைகளின் திறமைகளை ஆரம்பக் கட்டத்தில் இருந்தே கண்டறிய வேண்டும். 12 வயதுக்குள்ளாகவே, பல்வேறு விளையாட்டுகளில் திறமையான குழந்தைகளைக் கண்டறிந்து, அவர்களுக்கு சர்வதேசத் தரத்திலான பயிற்சிகளை வழங்குவதற்கு இந்த அரசு உறுதியாக இருக்கும். அந்த நோக்கத்தில்தான் இங்கே அர்ஜுன் அவர்கள் சொன்னதைப்போல, 2021 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு வெளியிடப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையிலே, ஒலிம்பிக் விளையாட்டில் விளையாட்டு வீரர்கள் வெற்றி பெறும் வகையில், தமிழ்நாட்டை 4 பகுதிகளாகப் பிரித்து, ஒலிம்பிக் அகாடமிகள் திறக்கப்படும் என்ற செய்தி சொல்லப்பட்டிருக்கிறது. எல்லா விளையாட்டுகளிலும் சாதிக்கக்கூடிய வீரர்களுக்கு சிறப்புப் பயிற்சி,

ஊக்கத் தொகை, போட்டிகளுக்குச் சென்று வர பயணச் செலவு உள்ளிட்ட அனைத்து ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

சென்னையில் பிரம்மாண்டமான விளையாட்டு அரங்கம் அமைத்து எல்லா வகையான போட்டிகளுக்கும் உயர்தரப் பயிற்சிகள் அளிக்கப்படும். அதுமட்டுமல்லாமல், பல்வேறு வாக்குறுதிகளை நாங்கள் வழங்கியிருக்கிறோம். நிச்சயமாக அத்தனையும் நிறைவேற்றப்படும். ஒலிம்பிக் அகாடமி உள்ளிட்ட முன்னெடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதன் மூலமாக இந்திய அளவிலான தரவரிசையில் தமிழ்நாட்டையும், சர்வதேச அளவிலான தரவரிசையில் இந்தியாவையும் நாம் முன்னேற்றிட முடியும். இந்தத் திசையில் நாம் தொடர்ந்து பயணித்தால் ஒலிம்பிக் போட்டிகளின் பதக்கப் பட்டியலில் சீனா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளை ஒரு நாள் பின்னுக்குத் தள்ளக்கூடிய ஒரு சூழ்நிலை நிச்சயம் ஏற்படும்.

நானும் பள்ளி, கல்லூரிப் பருவத்தில் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றதுண்டு. விளையாட்டுகளில் பங்கேற்கும்போது, விளையாட்டு வீரர்களுக்கு என்னென்ன தேவை என்பதை நான் நன்றாக அறிந்து வைத்துள்ளேன். சென்னையின் மேயராகவும் இந்த மாநிலத்தின் துணை முதல்வராகவும் இருந்தபோது மிகச் சிறந்த கிரிக்கெட் வீரர்களுடன் காட்சிக் கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்று விளையாடியதை மறக்க முடியாது. எனவே, தமிழ்நாட்டின் முதலமைச்சராக மட்டுமின்றி, விளையாட்டின் மீதான ஆர்வத்தில் உங்களில் ஒருவனாக உங்கள் முன்னேற்றத்திற்கு வெற்றிக்கு உதவிட நான் என்றைக்கும் தயாராக இருக்கிறேன்.

கொரோனா நோய்த் தொற்று உங்களைப் போன்ற விளையாட்டுத் துறையினரின் சாதனைகளுக்கும், தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கும் தடையாக இருந்துவிடக்கூடாது என்பதால்தான், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து விளையாட்டு வீரர்களையும் கருத்திலேகொண்டு இந்தத் தடுப்பூசி சிறப்பு முகாம் இங்கே தொடங்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளி வீரர் - வீராங்கனையருக்கு அவரவர் இருப்பிடத்திற்கே சென்று தடுப்பூசி போடுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக இங்கே தெரிவித்திருக்கிறார்கள்.

விளையாட்டுப் போட்டிகளைப் பொறுத்தவரை ஒரு அணி ரன் எடுத்தும் வெற்றி பெறலாம்; எதிரணியினர் ரன் எடுப்பதைத் தடுத்தும் வெற்றி பெறலாம். ஒரு அணி கோல் அடித்தும் வெற்றி பெறலாம்; எதிரணியினரின் கோல் முயற்சிகளைத் தடுத்தும் வெற்றி பெறலாம். இந்த கொரோனா நோய்த் தொற்றுக் காலத்தில், முதல்கட்டமாக, அத்தகைய தடுப்பாட்டத்தைக் கையாள்வது போல, இந்தத் தடுப்பூசி முகாம் இங்கே நடைபெறுகிறது. இந்தச் சிறப்பு முகாமை அனைத்து விளையாட்டு வீரர் - வீராங்கனைகளும் பயன்படுத்தி, தங்களது உடல் நலனைப் பேணிப் பாதுகாத்து, விளையாட்டுக் களத்தில் தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்திட வேண்டுமென அன்புடன் நான் வேண்டுகிறேன்.

உலக அரங்கில் விளையாட இருக்கக்கூடிய நமது விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்த வேண்டிய கடமை நம் அரசுக்கு இருக்கிறது. எனவே, தங்கப் பதக்கம் வெல்லக்கூடிய வீரர்களுக்கு ரூபாய் 3 கோடி

வழங்கப்படும். வெள்ளிப் பதக்கம் வெல்லக்கூடிய வீரர்களுக்கு ரூபாய் 2 கோடி வழங்கப்படும். வெண்கலப் பதக்கம் வெல்லக்கூடிய வீரர்களுக்கு ரூபாய் 1 கோடி வழங்கப்படும் என்று தமிழ்நாடு அரசின் சார்பில் இந்தப் பரிசுத் தொகை அறிவிப்பை வெளியிடுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

**‘தமிழக வீரர்களே சென்று வருக! தரணியை வென்று வருக!’**

நன்றி, வணக்கம்.

\- - - - - -

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9